பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

06 10 2025 7.15

ஆகாஷவாணி செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பீகார் சட்டப்பேரவை தேர்தல் இரண்டு கட்டங்களாக அடுத்த மாதம் 6 மற்றும் 11 ஆம் தேதிகளில் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

2. ஜம்மு கஷ்மீர் யூனியன் பிரதேசம் மற்றும் பஞ்சாப், ஒடிசா, ஜார்க்கண்ட் உள்ளிட்ட 6 மாநிலங்களுக்கு உட்பட்ட 8 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தலும் அடுத்த மாதம் 11 ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

3. எரிசக்தித் துறையின் வளர்ச்சியில் நிலக்கரி முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

4. மருத்துவத்திற்கான நோபல் பரிசு அமெரிக்கா மற்றும் ஜப்பானைச் சேர்ந்த மூவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

5. அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Veer Chotrani காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள் ---

பீகார் சட்டப்பேரவை தேர்தல் இரண்டு கட்டங்களாக அடுத்த மாதம் 6 மற்றும் 11 ஆம் தேதிகளில் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இன்று புதுதில்லியில் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு கியானேஷ் குமார் தேர்தல் அட்டவணையை செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

இதன்படி, முதற்கட்டமாக அடுத்த மாதம் 6 ஆம் தேதி நடைபெறும் தேர்தல் நடைபெறும் 121 தொகுதிகளில் வேட்பு மனுதாக்கல் வரும் 10 ஆம் தேதி தொடங்கி 17 ஆம் தேதி வரை நடைபெறும்.

அதற்கு மறுநாள் மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும்.

மனுக்களை விலக்கிக் கொள்ள 20 ஆம் தேதி கடைசிநாளாகும்.

இரண்டாம் கட்டமாக அடுத்த மாதம் 11 ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 122 தொகுதிகளில் வேட்பு மனு தாக்கல் வரும் 13 ஆம் தேதி 20 ஆம் தேதி வரை நடைபெறும்.

அதற்கு மறுநாள் மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும்.

மனுக்களை விலக்கிக் கொள்ள 23 ஆம் தேதி கடைசிநாளாகும்.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 14 ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதை அடுத்து, பீகார் மாநிலத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஜம்மு கஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் 2 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் மற்றும் பஞ்சாப், ஒடிசா, ஜார்க்கண்ட், ராஜஸ்தான், தெலங்கானா, மிசோரம் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட தலா ஒரு சட்டப்பேரவைத் தொகுதிக்கான இடைத் தேர்தல் அடுத்த மாதம் 11 ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 14 ஆம் தேதி மேற்கொள்ளப்படும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

>><><><><<

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பீகார் சட்டப்பேரவை தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டதை அடுத்து, வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் அவர் இதனை கூறியுள்ளார்.

வளர்ச்சியில் பின்தங்கியிருந்த பீகாரில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு சிறந்த நிர்வாகத்தின் மூலம் வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு வந்துள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

கட்டமைப்பு, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

>><><><><<

எரிசக்தித் துறையின் வளர்ச்சியில் நிலக்கரி முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

அருணாச்சலப்பிரதேசத்தில் Changlang மாவட்டத்தில் புதிய நிலக்கரி சுரங்கத்தின் செயல்பாடுகளை அம்மாநில முதலமைச்சர் திரு Pema Khandu தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்த நிலக்கரி சுரங்கத் திட்டம் வடகிழக்கு மாநிலங்களின் எரிசக்தித் தேவையை பூர்த்தி செய்யும் என்று அவர் கூறினார்.

இந்த நிலக்கரி சுரங்கத்தின் மூலம் கூடுதல் வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>><><><><<

தொலைத் தொடர்பு துறையில் இந்தியா முன்னணியில் உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெறவுள்ள இந்தியா மொபைல் உச்சிமாநாட்டிற்கான ஏற்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட பின்னர் சமூக வலைதளத்தில் அவர் இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

இம்மாநாடு நாளை மறுநாள் தொடங்கி நான்கு நாட்கள் நடைபெறவுள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

6ஜி தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணியில் திகழும் என்றும் திரு ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

>><><><><<

தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி சிறப்பாக செயல்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

இன்று தமிழகத்தின் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – முருகன் 1 – 18 செகண்ட்ஸ்)

இருப்பினும் ஆளுநர் விவகாரத்தில் திமுக அரசியல் புரிவதாக அவர் குற்றம்சாட்டினார்.

கரூர் உயிரிழப்பு சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்ட தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக அவர் கூறினார்.

(சவுண்ட் பைட் – முருகன் 2 – 15 செகண்ட்ஸ்)

>><><><><<

மருத்துவத்திற்கான நோபல் பரிசு மூன்று பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த Mary Brunkow, Fred Ramsdell மற்றும் ஜப்பானின் Shimon Sakaguchi -க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நோய் எதிர்ப்பு தொடர்பான ஆராய்ச்சிக்காக இந்த விருது அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

>><><><><<

குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று மாநிலங்களவை செயலகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது மாநிலங்களவை செயலகத்தின் செயல்பாடுகள் குறித்து அதிகாரிகள் விரிவாக எடுத்துரைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><><><<

இரும்பு மனிதர் என போற்றப்படும் சர்தார் வல்லபாய் பட்டேலின் 150 ஆவது பிறந்த தினத்தையொட்டி நாடுமுழுவதும் இளையோர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை சார்பில் பாதயாத்திரை மேற்கொள்ளப்படவுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்த பாத யாத்திரையை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

நாட்டின் ஒற்றுமைக்காக இளையோர் சக்தியை பயன்படுத்தும் வகையில் இந்த பாத யாத்திரை நடைபெறவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>><><><><><<

ஆராய்ச்சிப் பணிகளுக்கு மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் திருமதி சாவித்திரி தாக்கூர் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சமூக அறிவியல் ஆராய்ச்சிக் குழுமத்தின் சார்பில் ஆராய்ச்சி சுற்றுலாவை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

ஆராய்ச்சிப் பணிகளில் மகளிர் பங்களிப்புக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இந்த சுற்றுலா தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்,.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் ஆராய்ச்சிப் பணிகள் முக்கிய பங்கு வகிக்கும் என்றும் திருமதி சாவித்திரி தாக்கூர் தெரிவித்தார்.

>><><><><><<

கேரளாவில் 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவர்களின் பரிந்துரை இல்லாமல் மருந்துகளை வழங்கக்கூடாது என்று அம்மாநில சுகாதாரத் துறை அமைச்சர் திருமதி வீணா ஜார்ஜ் கூறியுள்ளார்.

இன்று திருவனந்தபுரத்தில் இதுதொடர்பாக நடைபெற்ற உயர்நிலைக்குழு கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இருமல் மருந்தை பயன்படுத்துவதற்கான நெறிமுறைகளை வகுப்பதற்கு என 3 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த குழு அளிக்கும் பரிந்துரைகள் அடிப்படையில் உரிய நெறிமுறைகள் வகுக்கப்படும் என்றும் திருமதி வீணா ஜார்ஜ் கூறினார்.

>><><><><><<

சத்தீஸ்கரில் 3 நக்ஸலைட்டுகள் பாதுகாப்புப்டையினர் முன் இன்று சரணடைந்தனர்.

Gariaband மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் இவர்கள் சரணடைந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

மூன்று லட்சம் ரூபாய் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டு இருந்த இந்த நக்ஸலைட்டுகள் சரணடைந்தது பாதுகாப்புப் படையினருக்கு கிடைத்த வெற்றி என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><><><<

மாலத்தீவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு Mohamed Ghassan Maumoon -வுடன் நடத்திய பேச்சுக்கள் ஆக்கப்பூர்மாக அமைந்ததாக பாதுகாப்புத்துறை செயலர் திரு ராஜேஷ் குமார் சிங் கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக மாலத்தீவு சென்றுள்ள அவர், இந்த பேச்சுக்களுக்கு பின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

>><><><><><<

*இந்தோனேஷியாவில் பள்ளிக் கட்டிடம் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 53 ஆக அதிகரித்துள்ளது.*

*இடிபாடுகளுக்கு இடையே சிக்கியவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.*

*>><><><><><<*

*பிரான்ஸ் பிரதமர் திரு Sebastien Lecornu தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.*

*பதவியேற்ற நான்கு வாரங்களுக்குள் அவர் பதவி விலகியுள்ளார்.*

*>><><><><><<*

<u>*விளையாட்டுச் செய்திகள்*</u>

*அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Veer Chotrani காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-11, 11-6, 11-5, 11-5 என்ற செட்கணக்கில் இந்தியாவின் Abhay Singh-ஐ வென்றார்.*

-------------------

*உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் 6 தங்கம் உள்ளிட்ட 22 பதக்கங்களை வென்ற இந்திய அணியினரின் செயல்பாடு வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவு செய்துள்ள அவர், இப்போட்டியை புதுதில்லியில் நடத்தியது இந்தியாவுக்கு கிடைத்த பெருமை என்றும் குறிப்பிட்டுள்ளார்.*

*>> <<*